பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 06 செவ்வாய்க்கிழமை 22 09 1992 UTHAVAN - A Lively National Tamil Daily கதிர் 299

### மோதல்

யாழ்ப்பாணம், செப். 22

வெற்றிலைக்கேணியில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் போராளியான வேலன் அல்லது கிறின் (விஜுகோபால் கிருஸ்ணகுமார் - புலோலி தெற்கு) வீரமரணமடைந்தார்.

(உ-3)

# கிழக்குத் தாக்குதல்களில் நேற்று 32 படையினர் பலி!

## பதிலடிக்கு அனுப்பப்பட்ட பொலீஸார் சீருடைகளைக் களைந்துவிட்டு ஓட்டம்!

கொழும்பு, செப். 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடந்த காயங்கேணிக்கு மேலதிக படையினரும் பொலீஸாரும் உடனடியாக அனுப்பப்பட்டனர் என்றும் —

ஆனால் அப்படி அனுப்பப்பட்ட 30 பொலீஸாரில் 13 பேர் தமது சீருடைகளை கழற்றி விட்டு சிவில் உடையில் — அப்பகுதியால் வந்த லொறி ஒன்றைக் கடத்தி — அதில் ஏறி தப்பிச் சென்றார்கள் என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் தப்பிச் சென்ற 13 பொலீஸாரும் பின்னர் படையினரின் மற்றொரு சோதனைச் சாவடியில் வைத்துப் பிடிபட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி அரசுப் படையினர் தங்களது தளங்களில் இருந்து தப்பிச் செல்வது அண்மைக்காலமாக அதிகரித்து வருவதை ஏஜென்ஸிச் செய்திகள் சுட்டிக் காட்டின.

(உ-எ)

## மட்டக்களப்பில் - 23 திருகோணமலையில் - 9

யாழ்ப்பாணம், செப்டம்பர் 22

கிழக்கு மாகாணத்தில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய இரு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் குறைந்தது 32 படையினர் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பில் நேற்று புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 23 படையினரும், திருமலையில் இடம்பெற்ற மற்றொரு கண்ணி வெடித் தாக்குதலில் 9 படையினரும் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பில் காயங்கேணி இராணுவ முகாமில் இருந்த நாவலடி இராணுவ முகாமை நோக்கி ரோந்து வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவு:

# 72 மணி நேர உண்ணாநோன்பு இன்று மாலை குருநகரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 22

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் குருநகர் தொடர்மாடி முன்றலில் இன்று தொடக்கம் தொடர்ச்சியாக மூன்று நாள் - 72 மணிநேர - உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இன்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாவிரதம் 25 ஆம் திகதி மாலை ஆறு மணிவரை ஒரே தொடர்ச்சியாக நடக்கும். குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் இதில் பங்குபற்றுவர்.

இதே வேளை, ஏழாவது நாளான நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் உண்ணாவிரதமும் சிரமதான வைபவங்களும் வழமைபோல நடைபெற்றன.

நேற்று நல்லூரில் நடந்த உண்ணாவிரதத்தில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பங்குபற்றினர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம், புங்குடுதீவு கொத்தணியைச் சேர்ந்த மாணவர்கள், திவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த பணியாளர்கள் உட்பட மற்றும் பலரும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

கடற்புலிகளின் ஏற்பாட்டில் யாழ். சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பெரும் எண்ணிக்கையான பெண்களும், முதியோரும் உணர்வு பூர்வமாகக் கலந்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 3 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 22

மட்டக்களப்பில் நேற்று நடந்த அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன்ட் சஞ்சீவன் அல்லது காமினி (குஞ்சுத்தம்பி தயாபரன் - ஆரையம்பதி), லெப்டினன்ட் இலக்கியன் (குமாரசாமி கஜேந்திர குமார் - கொம்மாந்துறை), கலாகரநாதன் (இராசலிங்கம் விஜயகுமார் - கல்விச்சை) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தனர்.

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 22

மட்டக்களப்பு காயங்கேணியில் நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ 60 மி. மி. வெற்போட் மோட்டர் | — | 01 |
| ★ அதற்குரிய ஷெல்கள் | — | 10 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி | — | 02 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — | 06 |
| ★ 40 மி. மி. பிஸ்டல் | — | 01 |
| ★ ரி - 81 ரக துப்பாக்கிகள் | — | 02 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — | 05 |
| ★ ரி - 56 ரக துப்பாக்கிகள் | — | 15 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — | 42 |
| ★ 40 மி. மி. ஷெல்கள் | — | 10 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 304 |
| ★ லிங்குடன் ரவைகள் | — | 332 |
| ★ ஏ. கே. ரவைக்கூடு தாங்கி | — | 07 |
| ★ இராணுவப் பைகள் | — | 02 |
| ★ சப்பாத்து | — | 3 சோடி |
| ★ இராணுவத் தொப்பி | — | 01 |

# கல்வித்துறையின் நிர்வாக அமைப்பில் பெரும் மாற்றம்!

## வடக்கில் ஜனவரி முதல் அமுல்

யாழ்ப்பாணம், செப். 22

கல்வித்துறை நிர்வாகத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த மாற்றங்களின்படி மாவட்டக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம், கொத்தணிப் பாடசாலை அமைப்பு முறை ஆகியவை செயல் இழக்கும்.

இவற்றுக்குப் பதிலாக பிராந்திய (Zonal) கல்வி அலுவலகம் பிரதேச (Divisional) கல்வி அலுவலகம் ஆகியவை ஏற்படுத்தப்படும்

புதிய திட்டம் தெற்கில் பல பகுதிகளில் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம் மாவட்டக் கல்வி நிர்வாகம் முற்றாக இம்முறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிழக்கிலும் சில பகுதிகளில் இம்முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. அங்கு பல இடங்களில் ஏற்கனவே பிரதேசக் கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

புதிய திட்டத்தின்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் பிரதேச கல்வி அலு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கெப்பிட்டிகொலாவ வரையுள்ள

# சிங்களக் கிராமங்களுக்குள் புலிகள் செல்ல வழி திறந்துவிடப்பட்டுள்ளது!

கொழும்பு, செப். 22

வவுனியாவிலுள்ள சில கிராமங்களில் இருந்து சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டிருப்பதால், அனுராதபுரம் மாவட்டத்தில் கெப்பிட்டிகொலாவ வரையுள்ள சிங்களக் கிராமங்களுக்குள் விடுதலைப் புலிகள் செல்லக் கூடியதாக வழி திறந்து விடப்பட்டிருக்கிறது.

அப்பகுதி மக்கள் இத்தகவலைத் தெரிவித்ததாக 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அண்மையில் வவுனியா பிரப்பமடு கிராமத்தில் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து அக்கிராமவாசிகளும் அந்த இடத்தை விட்டு அகற்றப்பட்டனர்.

இக்கிராமத்தினூடாக முக்குணுவெவ, கலேபுளியங்குளம், துடுவெவ, பக்காவெவ, இந்திகொல்ல, ஹல்மில்லவெவ, கட்டுகஹவெவ, குகுட்டுவெவ, கிவாரகல, மில்லேவ, கெப்பிட்டிகொலாவ ஆகிய கிராமங்களுக்கு புலிகள் செல்ல முடியுமென்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(உ 10)

# மணலாறில் நேற்று காவலரண் தகர்ப்பு!

யாழ்ப்பாணம், செப். 22

மணலாறு மாவட்டத்தில் உள்ள மண்கிண்டி இராணுவ முகாமின் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 1.10 மணியளவில் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் காவலரண் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

இராணுவ முகாமில் இருந்து சுமார் 500 யார்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகப் பத்திரிகையாளர் கூண்டில் ஏற்றப்பட்டார்

சென்னை, செப். 22

"முரசொலி" ஆசிரியர் செல்வம் நேற்று தமிழக சட்டசபையில் கூண்டில் ஏற்றப்பட்டு சபாநாயகரால் கண்டிக்கப்பட்டார்.

சபை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்ட வாசகத்தை பத்திரிகையில் பிரசுரித்து, சட்டமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இழுக்கு உண்டாக்க முனைந்ததற்காக அவர் கண்டிக்கப்படுவதாக முரசொலி செல்வத்திடம் சபாநாயகர் தெரிவித்தார்.

செல்வம் தலையசைத்து அதனை ஏற்றுக்கொண்டு சபையில் இருந்து வெளியேறினார்.

இச்செயலை ஆட்சேபித்து முன்னதாக எதிர்க் கட்சி எம். எல். ஏக்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

பத்திரிகை ஆசிரியர் கூண்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகளின் விஸ்வரூபத்தினால் படையினருக்கு பெரிய அச்சுறுத்தல்

கடந்த சில ஆண்டுகளுக்குள் அரச படையினரின் செயற்பாடுகளை முடக்கும் அளவுக்கு கடற்புலிகள் விஸ்வரூபம் எடுத்திருப்பதும் பாதுகாப்புப் படையினருக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது.

"கடற்புலிகள் — ஒரு பயங்கர அச்சுறுத்தல்" என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்' வார இதழில் ஷமிந்திரா பெர்டினண்டோ எழுதிய கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அக்கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் கடற்புலிகளின் பிரவேசம், அரச படையினருக்கு எதிரான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

தரையில் தமது கட்டுப்பாட்டை நிலைநாட்ட நம்பிக்கையற்ற நிலையில் போராடி வரும் கூட்டுப்படையினர், கடற்புலிகளின் அச்சுறுத்தலை ... மேலும் ஒருப்பிடவேண்டிய நிலை ஏற்படலாம்!

### தோல்வி

"பூமியதிர்ச்சி" ராணுவ நடவடிக்கை கடற்புலிகளை முற்றாக அழிப்பதில் தோல்வியடைந்து விட்டதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறின.

பூமியதிர்ச்சி நடவடிக்கைக்கு பின்னர்தான் மண்டை

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வித்துறையின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) வலயங்கள் [Divisional Education Offices] திறக்கப்படும்.

இவை தமது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள பிரதேச பணிமனைகளில் அல்லது அதற்கு அருகில் உள்ள பணிமனை ஒன்றில் இயங்கும்.

இந்தப் பிரதேச கல்வி அலுவலகங்களினதும் அவற்றுக் குட்பட்டவற்றினதும் கொடுப்பனவு மற்றும் விவகாரங்களை அந்தந்தப்பகுதி பிரதேச செயலர்களின் கீழ் செயற்படும் பிரதேச செயலகங்கள் கையாளும்.

கல்வித்துறை தொடர்பான நிர்வாக விடயங்களை மட்டும் பிரதேச கல்விச் செயலகம் கையாளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பிரதேச கல்விச் செயலகங்களுக்கும் பொறுப்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர்; இவர்கள் கல்வி நிர்வாக வேலைகளைக் கண்காணிப்பர்.

நிதி விடயத்தில் மட்டும் தமது பகுதிக்குப் பொறுப்பான பிரதேச செயலரின் [உதவி அரச அதிபரின்] அனுசரணையுடன் அவர் இயங்க வேண்டியிருக்கும்.

பிரதேச கல்வி செயலகங்களின் பணியை மேற்பார்வை செய்வதற்கு மாவட்டம் தோறும் பிராந்திய கல்விப் பணிமனை அமைக்கப்படும். இந்தப் பணிமனைக்கு பொறுப்பாக கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர். இந்தக் கல்விப் பணிப்பாளர்கள் "மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்" என்று அழைக்கப்படுவர்.

இதன்படி—

வடக்கு - கிழக்கில்—

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு பிராந்திய கல்விப் பணிமனைகள் இயங்கும்.

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை கல்முனை ஆகிய இரு பிராந்திய கல்விப் பணிமனைகளும் —

வடக்கில், யாழ் மாவட்டத்தில் இரு பிராந்திய கல்விப் பணிமனைகளும் இயங்கும்.

ஆகவடக்கிலும் கிழக்கிலும் மொத்தம் 10 பிராந்திய கல்விப் பணிமனைகள் இயங்கவிருக்கின்றன

இவற்றின் கீழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு (பிரதேச பிரிவுக்கு) ஒரு பிரதேச கல்வி அலுவலகம் என்ற அடிப்படையில் வடக்கிலும் கிழக்கிலும் மொத்தம் 70 பிரதேச கல்விப் பணிமனைகள் திறக்கப்படும்.

இதன்படி—

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரச அதிபர் பிரிவுகளில் 14 பிரதேச கல்விப் பணிமனைகள் திறக்கப்படும்.

மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி, சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குரிய பிரதேச கல்வி அலுவலகங்கள் ஒரு பிராந்திய கல்விப் பணிமனையின் கீழும்—

கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குரிய அலுவலகங்கள் மற்றைய பிராந்திய கல்விப் பணிமனையின் கீழும் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோன்று—

கிளிநொச்சி மாவட்டத்தில் அமையவிருக்கும் பிராந்திய கல்விப் பணிமனையின் கீழ் அந்த மாவட்டத்தில் உள்ள நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் பிரிவுக்கு ஒன்றாக நான்கு பிரதேச கல்விச் செயலகங்கள் திறக்கப்படும்.

வடக்கிற்குரிய பிராந்திய மற்றும் பிரதேச கல்வி அலுவலகங்கள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்துக்குரிய இரு பிராந்திய கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கும் மற்றும் பிரதேச கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் பதவிகளுக்கும் நியமிக்கப்பட இருப்போரின் பெயர்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக அறியவருகிறது. [உ-3]

### இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
### கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளை

மேற்படி பிரிவின் தொண்டர்களுக்கான கூட்டம் 23 - 09 - 1992 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பிரிவு அலுவலகத்தில் பிரிவுத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராசா அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு தொண்டர்களையும் புதிதாகச் சேரவிரும்பும் தொண்டர்களையும் தவறாது சமுகந்தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

செஞ்சிலுவைச் சேவையிலுள்ள

இ. மயில்வாகனம்.

செயலாளர்

[22628]

### 2ஆம் ஆண்டு நினைவலைகள்



**அருளப்பு யேசுதாஸ் [அருள்]**

[நியூட்டோன் ரேட் சென்ரர்—உரிமையாளர்]

அன்னை மடியில்: **1960 — 03 — 13**

கொலைஞர் பிடியில்: **1990 — 09 — 23**

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு, மீளாத் துயில் கொண்ட எம் தெய்வமே! பேச்சொன்றும் பேசாமல் எங்கள் முகம் பாராமல் மூளை தடுமாறுதப்பா! துயரேது வந்தாலும் துடைப்பதற்கு அருள் உண்டென்று உயர்வுபெற்று வந்தோம். எம் அகக்கோட்டை விழ்ந்ததப்பா! ஈராண்டு சென்றாலும் உம் இனிய உருவம் ஏங்கி ஏங்கிக் கதறுகின்றோம். என்றென்றும் வாடுகின்றோம். என்றாவது தீருமா இத் துயரம். ஒரு நாளும் தீராது என்று ஏங்கியே மறுகின்றோம் நாம்.

23 09-1992 இல் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்,

- குடும்பத்தினர்.

4ஆம் வட்டாரம்,

மண்டைதீவு.

## சடற்புலிகளின் விஸ்வரூபத்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) தீவில் இருந்து கடற்படையின் 30 அடி நீள அதிவேகப் படகு ஒன்றை கடற்புலிகள் கடத்திச் சென்றனர்.

ஆகவே மாதகலைக் கைப்பற்றியதன் மூலம் கடற்புலிகளின் தளவசதிகளை அழித்து விட்டதாகக் கூறப்படுவது, கடற்புலிகளுக்கு முடிவு கட்டப்படவில்லை என்பதை மிகத்தெளிவாகக் காட்டியுள்ளது.

அரச படைக்கு —

குறிப்பாக கடற்படைக்கு எதிராக கடற்புலிகள் நடத்திய துணிகரத் தாக்குதல்களும் இதனைத் தெளிவாக்கியுள்ளன.

### வல்வெட்டித்துறையில்

கடற்புலிகளின் மிகப் பெரிய தளவசதிகள் வல்வெட்டித்துறையில் இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விசேடமாக வடபகுதி யுத்த முனையில் கூட்டுப்படை நடவடிக்கைகளுக்கு எதிராக கடற்புலிகள் பாரிய அச்சுறுத்தலாக மெதுவாகவும் ஸ்திரமாகவும் உருவாகி வருகின்றனர் என்று சிலர் நம்புகின்றனர்.

### விமலரத்தின தப்பினார்

கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் மிகவும் மோசமானது கடந்த ஆண்டு செப்டம்பரில் இடம்பெற்றது. காரை நகருக்கு அருகில் தொடர் கண்ணிகளில் சிக்கி கடற்படை ரோந்துப் படகு ஒன்று சிதறியதில் இரண்டு அதிகாரிகள் உட்பட ஏழு படையினர் கொல்லப்பட்டனர். தப்பியவர்களில் ஒருவர் வட பிராந்திய கடற்படைத் தளபதியான கொமடோர் எச். ஆர். அமரவீரா ஆவார்.

அந்த ரோந்துப் படகில் செல்லும் முடிவை கடைசி நிமிடத்தில் பிரிகேடியர் விஜய விமலரத்தன கைவிட்டதால் அவர் சில மாதங்கள் கூடுதலாக வாழ முடிந்தது. இறுதியில் அராலித்துறை கண்ணியில் சிக்கி அவர் மரணமானார்.

### பிரபாகரன் மிகுந்த நம்பிக்கை

கடற்புலிகளின் பலத்தை அதிகரிப்பது குறித்து தீவிர அக்கறை காட்டி வரும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மிகுந்த நம்பிக்கையுடன் திகழ்கின்றார் என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா கடற்படையின் கடல் ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக கடற்புலிகளைக் கட்டி எழுப்புவதற்கு விடுதலைப் புலிகள் தலைமைத்துவம் திடசங்கற்பம் கொண்டிருப்பதாக லண்டன், பாரிஸ் ஆகிய இடங்களில் இருந்து வெளிவரும் விடுதலைப் புலிகளின் பிரசுரங்கள் தெரிவிக்கின்றன.

### தாக்குதலுக்கு புலிகள் தயாராகின்றனர்

விடுதலைப் புலிகளின் தரைப்படையும் கடற்புலிகளும் பாரிய தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகி வருவதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் திடமாக நம்புகின்றன.

முன்னேற்றமடைந்து வரும் விடுதலைப் புலிகளை இலகுவில் தடுத்து நிறுத்தி விட முடியாது என்று தமது ஆட்களை அரச படையினருக்கு கொடுத்து உதவி வரும் தமிழ் அமைப்பு ஒன்றின் தலைவர் சொன்னார்.

யாழ்ப்பாண நகரைப் பிடிக்கும் கூட்டுப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான செயற்பாடுகளில் கடற்புலிகள் பெரும் பங்கு வகிப்பர் என்று அரச படைக்கு உதவும் தமிழ்க் குழுக்களிடம் உள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படைக்கு எதிரான திட்டமிட்ட கடற்புலிகளின் தாக்குதல், யுத்த முனைக்கு பேரர் டாங்கிகள் மற்றும் காலாட்படை வாகனங்கள் ஆகியவற்றைக் கொண்டு போய் இறக்கும் நடவடிக்கைகளைப் பாதிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தமுனைக்கு ஆட்களையும் போர் ஆயுதங்களையும் கொண்டு சென்று இறக்குவதற்கு இராணுவம் கடற்படையை நம்பியுள்ளது என்பது விடுதலைப் புலிகள் தலைமைக்குத் தெரியும்.

1987 மே மாதத்திலிருந்து ஆனையிறவு மற்றும் சிலாவத்துறை இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான அருப்புகள் கடல் மூலம் கொண்டு போய் இறக்கப்பட்டன.

யுத்தமுனையின் பிந்திய ... இவ்வாண்டு இறுதிக்குள் இராணுவ ரீதியில் வெற்றி காண முடியும் என்ற அரசாங்கத்தின் நம்பிக்கையை விடுதலைப் புலிகள் சிதறடித்து விட்டனர் என்று பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர்.

அராலித்துறைக் கண்ணிச் சம்பவத்தில் உயர் படை அதிகாரிகள் பலியான சம்பவம் பாதுகாப்புப் படையினரின் யுத்த முயற்சிகளைப் பல வீனப்படுத்தி விட்டது என்று பலர் நம்புகின்றனர்.

அண்மைக்கால பின்னடைவுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஏற்பட்ட மிகமோசமானவை என்றும் அவர்கள் கூறினார்கள்.

பயிற்றப்பட்ட மற்றும் விசேட படையினர் எல்லாம் சேர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் எண்ணிக்கை 8 ஆயிரம் என்றும் —

1987 அக்டோபரில் இந்திப்படை யாழ் நகரைப் பிடித்தபோது பயிற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 200 மட்டுமே என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### புலிகளின் பலம் அதிகரிப்பு

கிழக்கில் நடத்தப்பட்ட பாரிய ஆட்திரட்டலினால் விடுதலைப் புலிகளின் பலம் வெகுவாக அதிகரித்துள்ளது என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

இதைவிட விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் 3 ஆயிரம் பேர் வரையில் உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை பாதுகாப்புப் படையினர் எப்படிச் சந்திக்கப் போகின்றனர் என்று தெளிவாகத் தெரியவில்லை.

### புலிகளின் தாக்குதல் தீவிரமாகும்

3-10-1987 அன்று குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்ட பின்னர் உயிரிழந்ததை ஆகியவற்றை நினைவுபடுத்தும் முகமாக அடுத்த மாதம் முதல் வாரத்தில் விடுதலைப் புலிகள் தமது தாக்குதலை தீவிரப் படுத்தலாம் என்று பலரும் நம்புகின்றனர்.

இலட்சிய வெறியுடன் யுத்தமிடும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பலனளிக்கக்கூடிய யுத்த தந்திரங்களை கடைப்பிடிக்கத் தவறுவது அபாயகரமாக முடியும்.

அரச படையினர் மத்தியில் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் ஆயுத இழப்புகள் அதிகம் என்றும் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கிலும், வடபகுதியில் சில இடங்களிலும் அரசக் கட்டுப்பாடு மீண்டும் நிலை நாட்டப் பட்டுவிட்டதாகத் திரும்ப திரும்பக் கூறி வந்தாலும். விடுதலைப் புலிகளின் பேரழிவைத் தரும் — பல தாக்குதல்களை நிறுத்துவதில் அரச படையினர் தோல்வி கண்டு விட்டனர்.

### மழை ஆரம்பித்தால் கவச வாகனங்கள் பயனற்றுப் போகும்

இம்மாதம் அல்லது அடுத்த மாதம் மழை ஆரம்பிக்கும் முன்னர் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதே பாதுகாப்புப் படையினரின் இலக்காக இருந்தது. மழைக்காலம் ஆரம்பித்தால் அதன் பின்னர் யாழ் நகரைப் பிடிக்கப் பயன்படுத்தப்படக்கூடிய — 20 ஆயிரம் படையினருக்கு உதவியாக புதிதாக வாங்கப்பட்ட — கவச வாகனங்களை பலனளிக்கக்கூடிய முறையில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

இம்மாத இறுதியில் வட பிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார். இதனால் யாழ்குடா மீது பாரிய தாக்குதல் நடத்தும் சாத்தியம் குறைவாகவே உள்ளது.

— இப்படி அந்த விமர்சனக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் சம்பளம்

ஆசிரியர்களின் செப்டெம்பர் மாதச் சம்பளத்தை பணமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பாடசாலை அதிபர்கள் இது சம்பந்தமாக வங்கியுடன் தொடர்பு கொண்டால் தக்க உதவ முடியும் என்று இலங்கை வங்கியின் மேற்றக் கிளை பிரதான முகாமையாளர் தெரிவித்தார். [உ]

## தபால்களை இன்று சேர்க்குக!

வெளியூர் தபால்களை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக தபாற் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

நாளை கொழும்பு செல்லும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் வெளியூர்த் தபால்கள் அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-17)

## கிளாலிப் பாதைக்கு தடையாம்!

கிளாலிக் கரையில் இருந்து யாழ்: குடாவை இணைக்கும் குஞ்சுப்பரந்தன் கடல்வழிப் பாதையும் —

இதன் வழியாகச் செல்லும் சகல படகுச் சேவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

—இலங்கை வானொலியின் யாழ். பிராந்திய சேவையில் இவ்வாறான அறிவிப்பு ஒன்று நேற்று ஒலிபரப்பப்பட்டது.

### 72 மணிநேர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) கொண்டனர்

வடமராட்சி வடக்கு சற்கோட்டை புனித ஆலய முன்றலில் நடந்த உண்ணாவிரதத்தில் பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றினர்.

திருநெல்வேலிச் சந்தியில் வைக்கப்பட்டுள்ள தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு அருகில், 50 கலிபர் பூட்டிய நீளப் படகு ஒன்றின் மாதிரி உருவம் வைக்கப்பட்டுள்ளது. இதனை பெருந்திரளான மக்கள் பார்த்துச் செல்கின்றனர். [அ-15-17-51-162]

### தமிழகப் ..

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி] டுள் ஏற்றப்பட்டு கண்டிக்கப்பட்டதை ஆட்சேபித்து, தி.மு.க. நேற்று மாநிலம் முழுவதும் மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்தியது.

### மணலாறில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) தொலைவில் அமைந்திருந்த காவலரண் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது தாக்குதலை யடுத்து, காவலரணில் இருந்த இராணுவத்தினர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

இந்த தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ நடுத்தர ரவை - 2050
- ★ லிங்கு - ன் ரவை - 396
- ★ ரி 56 ரக மகஸின் - 06
- ★ ஜே. ஆர். ரக கைக்குண்டு - 11
- ★ ஏ. கே. ஹோல்ஸர் - 02
- ★ கவசத் தொப்பிகள் - 6
- ★ சப்பாத்து - 2 சோடி
- ★ இராணுவப் பட்டி - 01

### கிழக்குத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] னர் மீது நேற்று காலை 6.30 மணியளவில் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 23 இராணுவத்தினர் உயிரிழந்தனர்; மற்றொருவர் படுகாயமுற்றார்.

காயங்கேணி முகாமிலிருந்து 300 யார் தூரத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல் சுமார் 7 நிமிடமே நீடித்தது.

இதே வேளை—

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சிக்கிய இராணுவத்தினரைக் காப்பாற்ற, நாவலடிச் சந்தியில் உள்ள முகாமில் இருந்து 3 கவச வாகனங்கள் சகிதம் முன்னேறி வந்த படையணி மீது விடுதலைப் புலிகளின் மற்றொரு அணி தாக்குதல் நடத்தியது: கண்ணிவெடித் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலை அடுத்து கவச வாகனம் சகிதம் வந்த படையணி முன்னேறும் முயற்சியைக் கைவிட்டது.

மோதல்கள் நடந்துகொண்டிருந்த சமயம் ஹெலி ஒன்று அந்தப் பகுதியில் பரவலாக கண்டபடி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

இந்தத் தாக்குதலில் 60 மி. மி. மோட்டார், ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கிகள் உட்பட 20 நவீனரக ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில்—

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 9 படையினர் உயிரிழந்ததாக கொழும்புப் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது. [உ-எ-3-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைச் சிறையில் அடைத்தாலும் புலிகள் ஆதரவுப் போர் தொடரும்

## நெடுமாறன் அறிவிப்பு

தமிழ்த் தேசிய கட்சித் தலைவர் திரு. ப. நெடுமாறன் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்காகக் குரல் கொடுத்து வருபவர்.

கடந்த 10, 11, 12 ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் புலிகளுக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் —

அந்த மாநாட்டில் பங்குபற்றியதற்காக திரு. நெடுமாறன் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே.

கைதாவதற்கு முன்னர் — தமிழர் வாழ்வுரிமை மாநாட்டு காலத்தில் — சென்னையில் வைத்து உதயனின் விசேட பிரதிநிதிக்கு அவர் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

கேள்வி:- ஈழத் தமிழர்களுக்காகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகவும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்காகவும் ஆதரவுக் குரல் கொடுத்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறீர்கள். தமிழக வார இதழான 'சத்திரியன்' இல் 'மாவீரன் பிரபாகரன்' என்ற தொடர் கட்டுரையைக் கூட வரைந்து வருகிறீர்கள். இதற்காக உங்கள் மீது தடை விதிக்கப்படலாம் அல்லவா? நீங்கள் கைது செய்யப்படவும் கூடுமல்லவா?

நெடுமாறன்:- இதற்கெல்லாம் நான் அஞ்சவில்லை.

'சத்திரியன்' வார இதழில் 'மாவீரன் பிரபாகரன்' தொடர் வருவதை அடுத்து அதன் விற்பனை இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது. தலைவர் பிரபாகரனுக்கு தமிழக மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கைத் தான் இது காட்டுகிறது.

என்னைக் கைது செய்யலாம்; அல்லது எனது பிரசார நடவடிக்கைகளை முடக்கலாம். ஆனால் நான் அஞ்சப் போவதில்லை.

என்னை சிறைக்கு அனுப்பினாலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான எனது போராட்டம் ஓயாது அந்த இறைவாய்ப்பைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகத் தொடர்ந்து எழுதுவேன்; புலிகளுக்கு ஆதரவாக இன்னும் பல புத்தகங்களை எழுதக் கிடைத்த வாய்ப்பாக சிறையைப் பயன்படுத்துவேன்.

கேள்வி:- ராஜீவ்காந்தி மரணத்துக்கு விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்றதே?

நெடுமாறன்:- ராஜீவ் காந்தி மரணம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது வழக்கு முடியாமல் விடுதலைப் புலிகள் தான் ராஜீவைக் கொன்றார்கள் என்று எப்படி இவர்கள் கூப்பாடு போட முடியும்? அதிமுக அரசும் இந்திய மத்திய அரசும் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு இத்தகைய வீண் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். நாங்களும் மக்கள் மத்தியில் உண்மை நிலையைச் சொல்லி வருகிறோம்.

கேள்வி:- ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா முற்றிலும் பொறுப்பற்ற தன்மையில் செயல்பட்டு வருகிறது. ஈழத்தமிழர் பிரச்சினைக்கு முடிவுதான் என்ன?

நெடுமாறன்:- ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி திட்டவட்டமான கொள்கையைப் பின்பற்றி வந்தார் அதற்கு விரோதமாக ராஜீவ் காந்தியின் கொள்கை அமைந்தது. அவரால் அவரின் அணுகுமுறையும் படுதோல்வி அடைந்தது; அவரால் உருவாக்கப்பட்ட இலங்கை — இந்திய உடன்பாடும் தோல்வியடைந்தது.

இலங்கை - இந்திய உடன்பாட்டை ஈழத் தமிழர்களும் ஏற்கவில்லை; சிங்கள அரசும் ஏற்கவில்லை.

எனவே படுதோல்வியடைந்துவிட்ட இந்த அணுகுமுறையை இந்திய அரசு கைவிடவேண்டும்; தமிழ் மக்களின் பேராதரவு பெற்ற இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரிக்க முன்வர வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம்தான் ராஜீவ் காந்தி விட்ட தவறுகளைத் திருத்த முடியும்.

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தமிழீழம் அமைவது ஒன்றே யதார்த்தபூர்வமான வழியாகும். இதனை உணர்ந்து அதற்கு ஏற்ற வகையில் இந்திய அரசு செயல்பட வேண்டும்.

கேள்வி: பிரபாகரனைப் பிடிப்பதற்கு இந்தியப் படையை அனுப்ப வேண்டும் என்று சுப்பிரமணியசுவாமி கோரியுள்ளாரே?

நெடுமாறன்: ஏற்கனவே ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட

## உதயனுக்கு விசேட பேட்டி

வர்களைக் கொண்ட இந்திய இராணுவப்படை கூட அங்கு போய், பிரபாகரனைப் பிடிக்க முடியாமல் இரண்டு வருடங்களின் பின் வெறுங்கையோடு திரும்பியிருக்கிறது. இந்த நிலையில் பிரபாகரனைப் பிடிக்க வேண்டும் என்று கூப்பாடு போடுவதெல்லாம் சிறுபிள்ளைத்தனமாகும்.

வேண்டுமென்றால் பிரபாகரனைப் பிடிப்பதற்காக சூராதி சூரர் சுப்பிரமணிய சுவாமி தலைமையில் ஒரு படையை ஈழத்துக்கு அனுப்பி வைக்கலாம். அப்படி அனுப்பினால் இந்தியாவைப் பிடித்த சனியனாவது ஒழியும்.

கேள்வி: ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச மத்தியஸ்த முயற்சிகள் ஏதும் எடுக்கப்பட்டுள்ளனவா?

நெடுமாறன்:- மொரீஷியஸ் நாட்டு வெளிவிவகார அமைச்சர் திரு. போல் டெரங்கர் புதிய சமரச முயற்சி ஒன்றில் இறங்கியிருக்கிறார்.

இது தொடர்பாக இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளுடன் அவர் பேச்சு நடத்தியுள்ளார்.

ஈழத் தமிழர் பால் ஆழ்ந்த அனுதாபம் கொண்டிருக்கும் மொரீஷியஸ் அமைச்சர் இப்பிரச்சினைக்கு பிராந்திய சமரசம் ஒன்றை ஏற்படுத்த முயன்று வருகிறார்.

இந்த சமரச முயற்சிக்கு இந்திய அரசு ஆதரவு வழங்குமா இல்லையா என்பது குறித்து நாம் கவலைப்படப் போவதில்லை.

சமரச முயற்சியை இலங்கை ஏற்காவிட்டால் அந்த அரசுக்கு எதிராக சர்வதேச நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவோம்.

கேள்வி:- இறுதியாக தமிழீழ மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

நெடுமாறன்:- தமிழீழ மக்களுக்கு நெருக்கடிகளும், சோதனைகளும் ஏற்பட்ட காலங்களில் எல்லாம் விடுதலைப் புலிகளின் உதவியோடு தமிழீழம் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறினேன்; அங்கிருந்து திரும்பி வந்து அங்குள்ள உண்மை நிலையை இந்தியாவிலும் உலகநாடுகளிலும் எடுத்துக் கூறி, ஆதரவு திரட்டியிருக்கிறேன்.

வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பிரபாகரன் அவர்களே! விடுதலைப் புலிகள் வீரர்களே! தமிழீழ மக்களே! உங்களை சந்தித்துப் பேசவே விரும்புகிறேன். வாய்ப்புக் கிடைத்தால் அங்கு வருவேன் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ★

---

தொண்டா சொல்கிறார்

# சமஷ்டி முறையைச் சிங்களவர் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்

## தற்போதைய அரசமைப்புக்கு உட்பட்டே தீர்வு

கொழும்பு செப்: 22

"விரக்தியடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பாதை தவறிச் செல்கிறது. அது தனது சமஷ்டிக் கோரிக்கையைப் புதுப்பித்துள்ளது சமஷ்டியை சிங்கள மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்."

அமைச்சர் தொண்டமான் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி அரசமைப்புதான் வழி என்று கூறுவது முற்றாகப் பாதையில் இருந்து விலகிச் செல்வதாகும்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி தமது சமஷ்டிக் கோரிக்கையை (Fedaralisim) முன்னர் ஒரு முறையும் முன் வைத்தது. ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

"'இஸம்'கள் பற்றி பேசிக் கொண்டிருப்பது காலத்தை விரயம் செய்வதாகும். தற்போதைய அரசமைப்புக்கு உட்பட்டதான தீர்வு ஒன்று மட்டுமே சிங்களப் பெரும்பான்மையினால் ஏற்றுக் கொள்ளப்பட முடியும்.

"தற்போதைய அரசமைப்புக்குட்பட்டு நாட்டில் சமாதானம் காணப்பட வேண்டும் என்பதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடாகும். தற்போதைய அரசமைப்புக்குட்பட்டு காணப்படும் எதுவும் தீர்வாகலாம்.

"அதிகாரப் பகிர்வு எதற்கும் 'இஸம்' என்று அழைப்பதை நான் எதிர்க்கின்றேன்" — இவ்வாறு திரு. தொண்டமான் சொன்னார். (த-எ)

---

திலீபன் நினைவாக

# இன்று இடம்பெறும் சிரமதானப் பணிகள்

தியாகி லெப். கேர்ணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவாக இன்று சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ள இடங்களின் விவரம் வருமாறு:-

தீவகக் கோட்டத்தில் — சோனக தெரு அப்பகுதி மக்களால் சிரமதானம் செய்யப்படும்.

வலிகாமம் கோட்டத்தில் — உடுவில் வட்டத்தில் இணுவில் சந்தியிலிருந்து கந்தசுவாமி கோவிலடி வழியாக அண்ணா கோப்பி பின் வீதியாகச் சென்று துரை வீதியால் ஏறும் பாதை துப்புரவு செய்யப்படும்.

கோப்பாய் வட்டத்தில் ஆவரங்கால், கண்டிக்காடு நேரு வீதியிலும், அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் சிரமதானம் இடம்பெறும்.

வடமராட்சிக் கோட்டத்தில் — கரவெட்டி வட்டத்தில் நெல்லியடி பஸ் நிலையப் பகுதி, நெல்லியடி வர்த்தகர் சங்கத்தின் உதவியுடன் வகுப்புத் தொழிலாளர் சங்கத்தினாலும் துப்புரவு செய்யப்படும்.

தென்மராட்சி கோட்டத்தில் — கொடிகாமம் வட்டத்தில் மிருசுவில் அரசினர் வைத்தியசாலை துப்புரவு செய்யப்படும்.

இதேவேளை — விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவினர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு சிரமதானப் பணியை ஆரம்பிப்பர். (த-5)

---

தாண்டிக்குளம் முகாமிலிருந்து

# சொந்த இடங்களுக்குச் செல்ல எங்களை அனுமதியுங்கள்!

## தாயகம் திரும்பிய அகதிகள் கோரிக்கை

கொழும்பு, செப். 22

தமிழகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டு வவுனியா தாண்டிக்குளம் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழ் அகதிகள், தங்களை அங்கிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வெளியே உள்ள தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சனியன்று வவுனியா அரச அதிபரைச் சந்தித்து அவர்கள் இக்கோரிக்கையை விடுத்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது சொந்த இடங்களைக் கொண்டுள்ள அகதிகளை, அவ்விடங்களுக்கு செல்ல அனுமதிக்கும் இராணுவத்தினர், தங்களை தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கிறார்கள் இல்லை என்றும் அகதிகள் அரச அதிபரிடம் முறையிட்டனர்.

அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் விடயத்தில் தம்மால் எதுவும் செய்ய முடியாது என்றும் —

இராணுவத்தினரே அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்றும் அரச அதிபர் திரு. தில்லை நடராசா அகதிகளிடம் கூறியுள்ளார்.

அகதி முகாமில் தமக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் குறைக்கப்பட்டு விட்டன என்றும் —

சுயதொழில் செய்து சம்பாதிக்க வாய்ப்புகள் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் அகதிகள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

தமிழ் நாட்டில் இருந்து தாம் புறப்பட்டபோது, "இலங்கை அரசும், ஐ. நா. ஆணைக்குழு அதிகாரிகளும் அங்கு உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவார்கள்" என்று ஐ. நா. அகதிகள் ஆணைக்குழு அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் அகதிகள் குறிப்பிட்டுள்ளனர். (உ-5)

# யாழ்.குடா தாக்குதல் திட்டம் வெளியானது எப்படி?

## இராணுவம் இரகசிய விசாரணை

கொழும்பு, செப் 22

அராலிக் கண்ணி வெடிச் சம்பவத்தில் உயிரிழப்பதற்கு முன்னர் லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவினால் தயாரிக்கப்பட்டு இரகசியமாக வைக்கப்பட்டிருந்த யாழ். குடா மீதான பாரிய இராணுவத் தாக்குதல் திட்டம்' 'ராவய' பத்திரிகைக்கு எப்படிக் கிடைத்தது என்பது பற்றி இராணுவ உயர்பீடம் இரகசிய விசாரணை நடத்தி இருப்பதாக அறிய வருகின்றது.

அத் தாக்குதல் திட்டம் வெளியானது குறித்து இராணுவம் மௌனம் சாதித்து வருகிறது என்றும் "சண்டே ஒப்சேர்வர்' தகவல் வெளியிட்டிருக்கின்றது. (த-எ)

# கொலை, ஆட்கடத்தல்: 20 படையினர் மீது வழக்கு?

கொழும்பு, செப். 22

ஜே. வி. பி. வன்செயல்கள் நாட்டில் இடம்பெற்ற காலப் பகுதியில், அந்தப் போர்வையில் — தமது சொந்தக் குரோதங்களுக்குப் பழிதீர்க்கும்முகமாக — கொலை, ஆட்கடத்தல் போன்ற செயலில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இருபது இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்றத்தில் விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு தகவல் தெரிவித்தது. (உ-5)

# சார்க் நாடுகள் இடையே நாடு கடத்தல் உடன்படிக்கை

சார்க் அமைப்பு நாடுகளுக்கு இடையேயான நாடு கடத்தல் உடன்படிக்கை ஒன்று நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் உள்ள சார்க் தலைமைச் செயலகத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டில் உள்ள தீவிரவாதி ஒருவரை இன்னொரு சார்க் அமைப்பு நாட்டுக்கு நாடு கடத்துவது தொடர்பான நிபந்தனைகளைக் கொண்டதாக நாடு கடத்தல் உடன்படிக்கை அமையும்.

இந்த உடன்படிக்கை அமுலுக்கு வருமாயின் அதன் பின்னர் —

திரு. பிரபாகரனை நாடு கடத்துமபடி இந்தியா கோருமானால் இலங்கை அதற்கு உடன்பட்டேயாக வேண்டும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உடன்படிக்கையின் நகல் எதிர்வரும் நவம்பரில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் முன்வைக்கப்படும்.

—இவ்வாறு கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


## வற்பனைக்கு

புறொய்லர் குஞ்சுகள், சுறுப்பு, சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. இல 1, மத்திய சந்தை, மானிப்பாய். (22617)

## சோதிடம்

கல்வியில் இத்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றியீட்டுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! தினமும் காலை (8-30 — 12-30) த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், இல. 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை இல. 249. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (தினமும் பிற்பகல் 3-00 முதல் 6 00வரை). (22606)

## வெளிவந்துவிட்டது

கோப்பாய் சிவம் எழுதிய சிறுவர் பாடல்கள் "ரோஜாப்பூ" புதிய வெளியீடு பூந்தோட்டம், நொடியும், விடையும் பொறுக்கிய முத்துக்கள் ஆகிய நூல்களும் எங்கும் கிடைக்கும். (சி 3389)

## இலவச திருமண சேவை

யாழ். இந்து, 5' 3'' உயரம், மகம் - 1ஆம் பாதம், செவ்வாய்-7, அழகிய, சிவந்த, 27 வயதுடைய, குடும்பப் பாங்கான பெண்ணுக்கு நல்ல பதவியில் உள்ள மணமகன் தேவை வெளிநாடும் கவனிக்கப்படும். இல. 861, மே/பா, உதயன். (5331)

## காசாளர் தேவை

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பலசரக்கு ஸ்தாபனம் ஒன்றிற்கு பெண் காசாளர் தேவை. வேதனம் நேரில் தீர்மானிக்கலாம். இல. 443. மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (22600)


# இலங்கை-இந்திய உறவில்முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க உதவுங்கள்

## கொழும்பு அரசுக்கு தூதுவர் ஜா ஆலோசனை

கொழும்பு, செப். 22

இந்திய - இலங்கை நாடுகளிடையே இராஜதந்திர தகராறு ஒன்று உருவாகுவதைத் தடுப்பதில் இலங்கை ஒத்துழைக்க வேண்டும்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை — இந்திய ராஜதந்திர உறவுகளில் விரோதமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் தான் அறியாமலோ அல்லது தம்முடன் நேரடி தொடர்பில்லாத விஷயங்களில் தம்மை மறைமுகமாக சம்பந்தப்படுத்தி பயன்படுத்தவோ இலங்கை தன்னை அனுமதிக்கக் கூடாது என்றும் திரு. ஜா தெரிவித்தார்.

யார் பற்றி அல்லது எதனைப் பற்றி தாம் பிரஸ்தாபித்தார் என்பதை வெளியிட திரு ஜா மறுத்து விட்டார்.

"நான் எது பற்றிப் பேசுகின்றேன் என்பது சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரியும்" — என்று மட்டும் திரு. ஜா கூறினார்.

சார்க் அமைப்பு தொடர்பான அண்மைக்கால விளைவுகள் மற்றும் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற தெற்காசிய மாநாட்டில் இலங்கை தெரிவித்த கருத்துகள் பற்றியே திரு ஜா குறிப்பிட்டிருக்கலாம் என்று அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவித்தனர்.

"இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான பிரச்சினையாக உள்ளது இந்தியா தான். ஆனால் இந்தியாவுக்கு பல அயல் நாடுகள் உள்ளன. ஆகவே இந்தியா சம்பந்தப்பட்ட வேறு பல பதற்றமான பிரச்சினைகள் இந்தியாவுக்கு உண்டு. இரு தரப்பினரின் நலன்களுக்குள் வராத விஷயங்களை இலங்கை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது இரு நாடுகளுக்கும் இடையே விரோதமான விளைவுகளைத் தவிர்க்க உதவும்.

"இலங்கையில் உள்ள சில குழுக்கள் இந்திய - இலங்கை உறவுகளில் முன்னேற்றம் ஏற்படுவதை விரும்பவில்லை. இக் குழுக்களின் கை உயருவதற்கு இலங்கை அனுமதிக்கக் கூடாது.

"சில குழுக்களின் சுயநலன்களுக்கு விரோதமாக இலங்கை-இந்திய நாடுகளின் நல்லுறவு இருக்கிறது. ஆகவே அக் குழுக்கள் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் விருத்தியடைவதற்கு முட்டுக்கட்டைகளை உருவாக்கி வருகின்றன" —

இவ்வாறு திரு. ஜா பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

### புதிய தூதுவர்

கொழும்பு, செப். 21

இலங்கைக்கான புதிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராக ஜனாப் ஹூசெய்ன் ஹக்கானி நியமிக்கப்பட்டுள்ளார். (த-10)

# ஜே. ஆருக்கு பிரேமா முதல் வாழ்த்து

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் 86ஆவது பிறந்த தினத்தன்று அவருக்கு முதலில் சென்று வாழ்த்துக் கூறியவர் ஜனாதிபதி பிரேமதாஸா ஆவார்.

கடந்த வியாழன்று காலை 7 மணிக்கு திரு. ஜெயவர்த்தனாவின் வார்ட்பிளேஸ் இல்லத்துக்குச் சென்றார் திரு. பிரேமதாஸா.

பின்னர் செய்தியாளர் ஒருவர் திரு. ஜெயவர்த்தனாவைச் சந்தித்து 'பிரேமதாஸா பிறந்தநாள் பரிசு தந்தாரா?' — என்று கேட்டார்.

'என்ன பரிசு? அவர் வந்ததே போதுமானது' — என்று பதிலளித்தார் ஜெயவர்த்தனா. (உ-எ)


## வடமராட்சி தனியார் பேருந்து இயக்குனர் சங்கம்

நெல்லியடி. கரவெட்டி.

(750 89, 87, 94, 4)

### முக்கிய அறிவித்தல்

அங்கத்தவர்களுக்கு

தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக, எமது சேவையின் பஸ் வண்டிகள் அளவுக்கு அதிகமாக இருப்பதால், 19-9-92 தொடக்கம் புதிய பஸ்கள் பதிந்து சேவையில் ஈடுபடுத்துவதை (தற்காலிகமாக) மட்டுப்படுத்தி உள்ளோம் என்பதை அறியத்தருகிறோம்.

சி. சுப்பிரமணியம், செயலாளர். சி. புலேந்திரன், தலைவர்.

20-09-1992 (5836)


## திலீபன் நினைவாக

# கிளிநொச்சியில் மரநடுகை இயக்கம்

தியாகி லெப். கேர்ணல் திலீபனின் நினைவாக கிளிநொச்சியில் மரம் நடுகை இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி கிளிநொச்சி நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இம் மரம் நடுகை மாவட்டத்தின் சகல பகுதிகளிலுமுள்ள சனசமூக நிலையங்களின் ஊடாக இடம் பெறும். மா, பலா, தென்னை, வேம்பு போன்ற பயனுள்ள மரங்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (த 97)


## G. A. Q. 1993/94

### போதனை

பல்கலைக்கழகம் வெளிவாரி பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்: 27 - 09 - 1992

விண்ணப்ப படிவம், நேர அட்டவணை போன்ற விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
எஸ். அருள்நங்கை

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-3504)



## 3 ஆவது பிரிவு

துரிதமாக ஆங்கிலம் பேச 3 மாத பயிற்சி வகுப்புக்கள்

SPOKEN ENGLISH With GRAMMAR

By M. A. ஹரி B A Dip in-Eng.

ஆரம்பம்:
23 - 09 - 1992
Wed 4-30 p m

BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்
(சி-3501)



காவிய நாயகன்
தியாகச் செம்மல்

# திலீபனுக்கு எம் அஞ்சலிகள்



புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. (குறள் - 780)

"உருவாக்கிய தலைவன் நான் இறந்த செய்தி கேட்டுக் கண்ணீர் மல்கும் சாவை நான் அடைவேனாயின், அத்தகைய சாவையே நான் இரந்தும் கேட்பேன்."

- சுன்னாகம் மத்திய சந்தை உள் வியாபாரிகள்.

22-09-1992. (சி-2506)


# கிளிநொச்சியில் கடும் மழை

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவி வந்த கடும் வரட்சியினைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை கடும் மழை பெய்ததாக அறிவிக்கப்படுகிறது.

காலபோக நெற்செய்கைக்காக தங்கள் வயல்களை பண்படுத்தி வந்த விவசாயிகளுக்கு இம் மழை பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# திலீபன் நினைவாக இலக்கியப் போட்டிகள்

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி கிளிநொச்சி மாவட்டத்தில் கவிதை, கட்டுரை, பேச்சு, நாடகம் போன்ற இலக்கியப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பொ. அன்ரன் டென்சில் (ராஜா)
(யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவன்)

மலர்வு: 28 — 11 — 1969 உதிர்வு: 23 — 09 — 1990

"இறைவனை நேசித்தாய்
வாழ்வில் இளைஞரை நேசித்தாய்
ஈற்றில் இம் மண்ணை நேசித்தாய்
ஈழ மண்ணுக்காய் உயிர் நீத்தாய்."

70/6, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (22618)



## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 17 — 02 — 1976



உதிர்வு: 13 — 10 — 1990

விநாயமூர்த்தி மோகனராசன்
(உ. அ. மி. கல்லூரி, 9ஆம் ஆண்டு மாணவன்)

திதி: 22 — 09 — 1992

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பவர்கள்:

அன்பு:
அப்பா, அம்மா, அண்ணா, தங்கை, உற்றார், உறவினர், நண்பர்கள்.

பாலாவோடை,
உடுப்பிட்டி. (22619)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஏமாற்ற முடியாது

மக்களாட்சி நடக்கும் உலக நாடுகளில், இந்தியா மக்கள் தொகையில் பெரியது. அங்கு அரசியல் உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை என்பன உறுதி செய்யப்பட்டுள்ளன. ஆனால் மக்கள் ஆட்சியை வழிப்படுத்தும் சட்டங்கள் என்ற பெயரில், மக்களாட்சியில் மக்களுக்குரிய உரிமைகளை மிக மோசமாகப் பறித்து வரும் நாடுகளில் இந்தியாவும், ஸ்ரீலங்காவைப் போலவே முன்னணி வகிக்கிறது!

கடந்த வாரம் டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன், நெடுமாறன் ஆகிய தலைவர்களையும் ஆயிரக்கணக்கான கட்சித் தொண்டர்களையும் கைது செய்து சிறையில் வைத்தமை அதற்கு ஓர் ''அசல்'' உதாரணமாகும்.

தமிழகத்து மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று பேசியதும் தீர்மானம் நிறைவேற்றியதும் இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணங்களில் இரண்டு

ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனப்படி, ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. தமிழகத் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம். அதனை எவரும் மறுத்துரைக்க எந்தவித நொண்டிச் சாட்டும் கிடையாது. எனவே அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையைக் கேட்பது எந்த விதத்திலும் தேசத் துரோகமாகாது.

இந்தியாவின் மாநிலங்களின் பூரணசுயாட்சி இல்லை. கட்டுப்பாடுகளும், தடைகளும் தலையீடுகளும் அதிகம் உள்ளன. தமிழக மக்கள் விரும்பாத பல விடயங்கள் அவர்கள் மீது திணிக்கப்படுகின்றன. அவர்களுக்குரிய பல உரிமைகள் தடுக்கப்படுகின்றன. எனவே அவர்கள் பூரண சுதந்திரங்களை அனுபவிக்கும் பொருட்டு, சுய நிர்ணய உரிமையை வழங்குமாறு கேட்பது முற்றிலும் நியாயமானது.

ஒரு மனிதனின் உரிமைகள் அவன் தானாக அனுபவிக்க வேண்டியவை. மற்றவர்கள் கொடுக்க அவன் வாங்கும் சரக்குகள் அல்ல வாழ்வுரிமைகள் அவன் மனிதனாகப் பிறந்ததால் அவனைச் சேர்ந்தவை. ஏன்? மிருகங்கள், பறவைகளுக்குக் கூட அவற்றுக்கான வாழ்வுரிமைகள் உண்டு. அவற்றைப் பறிக்கவோ அல்லது அந்த உரிமைகளில் தலையிடவோ மனிதனுக்கு அதிகாரமில்லை.

எனவே தமது வாழ்வு உரிமையை வழங்குமாறு கோருவதற்கு, கேட்பதற்கு, அவற்றை அடையப் போராடுவதற்கு தமிழகத்து மக்களுக்குப் பூரண உரிமை உண்டு.

இந்திய மத்திய அரசும், அதன் அடிவருடியான ஜெயலலிதா அரசும் இதனை உணராமல், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததற்காக, அரசியல் தலைவர்களைக் கைது செய்தது முழுக்க முழுக்க அடக்குமுறை மேலாதிக்க வெறி நிறைந்ததாகும்.

தமிழர்கள் சுயநிர்ணய உரிமை கேட்பது பிரிவினைக்குச் சமனானது என்று மத்திய அரசு வியாக்கியானம் சொல்லக்கூடும். ஏன், தமிழர்கள் பிரிந்து தமக்கென ஒரு நாட்டை அமைக்கக் கூடாதா? அவர்கள் என்ன சொந்த நாடோ, அரசோ இல்லாதிருந்தவர்களா? சோழப் பேரரசர்களும், பாண்டிய மாமன்னர்களும் உலகின் பல பாகங்களிலும் கோலோச்சியவர்கள். அவர்களின் வழித்தோன்றல்கள் தமக்கென ஒரு நாடு அமைக்க, பூரண சுதந்திர இறைமை கொண்ட அரசு நிறுவத் தகுதியற்றவர்களா?

சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் அவர்கள் தனிநாடு, தமிழரசு என்பவற்றை முன்வைத்துப் பின்னர் மறந்துவிட்டார்கள் என்பதற்காக, இப்போது ராமதாஸும், ராமச்சந்திரனும், நெடுமாறனும் அதனை நினைக்கக்கூடாது, பேசக்கூடாது என்ற நியதி உண்டா?

சிலரைப் பல காலம் ஏமாற்றலாம், பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது.

இதனை இந்திய மத்திய அரசும், ஸ்ரீலங்கா அரசும் உய்த்துணர்வது நல்லது.

★ டாங்கிகள் ★ ஹெலிகள் ★ கவசவாகனங்கள் ✱ ஏவுகணைப் படகுகள்

# ரூ. 450 கோடிக்கு நவீன ஆயுதங்கள்

# ஸ்ரீலங்காவுக்கு வழங்க இணக்கம்

## 5 ஆண்டு கடனில் கம்யூனிஸ்ட் நாடு விநியோகிக்கும்

கொழும்பு, செப். 22

முன்னாள் கம்யூனிஸ்ட் நாடு ஒன்று மிகப் பிந்திய தயாரிப்புகளான போர் டாங்கிகள், துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்கள், துருப்புகளை ஏற்றிச் செல்லும் கவச வாகனங்கள் மற்றும் ஏவுகணைப் படகுகள் ஆகியவற்றைப் பெரும் எண்ணிக்கையில் இலங்கைக்கு விற்பனை செய்ய முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விஷயமறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

அந்த முன்னாள் கம்யூனிஸ்ட் நாடு விற்பனை செய்யவுள்ள ஆயுதங்களின் பெறுமதி 10 கோடி அமெரிக்க டொலராகும். இலங்கைப் பணத்தில் இதன் பெறுமதி 450 கோடி ரூபாவாகும். ஐந்து ஆண்டுகால கடன் அடிப்படையில் இந்த ஆயுதவகைகளை அந்த நாட்டிடம் இருந்து இலங்கை வாங்கிக் கொள்ளக்கூடியதான சலுகையும் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு-மேற்கு நாடுகளுக்கு இடையேயான ஆயுதக் குறைப்பு உடன்படிக்கையின் கீழ் தம்மிடம் மேலதிகமாக உள்ள ஆயுதங்களை விற்கும் திட்டத்தின் பிரகாரம் —

கலைந்துபோன வார்ஸோ இராணுவ அணியில் அங்கம் வகித்த அந்த முன்னாள் கம்யூனிஸ்ட் நாடு இலங்கையுடன் ஆயுதபேரம் நடத்த முன்வந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது

எனினும் —

முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளிடம் இருந்து ஆயுதங்களை வாங்குவது குறித்து இராணுவம் எச்சரிக்கையாக இருந்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய தொழில் நுட்பங்களுடன் போதிய பரிச்சயமில்லாமையும், எதிர்காலத்தில் உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான கஷ்டங்களும், இராணுவம் எச்சரிக்கையாக நடந்து கொள்வதற்குரிய காரணங்கள் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

இதேவேளை —

இவ்வளவு பெருந்தொகையாக ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதற்கு போதிய நிதி இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடலிலும் தரையிலும் துருப்புகளை ஏற்றிச் சென்று இறக்கக் கூடிய கவச வாகனங்களும், கவசத் தடுப்புகள் பொருத்தப்பட்ட மிகப் பிந்திய தயாரிப்பான ஹெலிக்கொப்டர்களும் விற்கப்படும் போர் ஆயுதங்களில் அடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-எ)

# இலங்கை-இந்திய ஒப்பந்தம் இப்போது ஏற்புடையதல்ல

## கைச்சாத்திட்ட ஜே. ஆரே கூறுகிறார்

கொழும்பு செப் 22

''1987 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை தற்போதைய சூழ்நிலையில் ஏற்புடையதல்ல''

— அந்த உடன்படிக்கையில் இலங்கைத் தரப்பில் கைச்சாத்திட்ட முன்னாள் ஜனாதிபதி திரு: ஜே. ஆர். ஜெயவர்த்தனா செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

''இந்த உடன்படிக்கைகளின் சகல ஏற்பாட்டையும் நாம் பூர்த்தி செய்துவிட்டோம். கிழக்கு மாகாணத்தில் இணைப்புக் குறித்த சர்வசன வாக்கெடுப்பு மட்டுமே நடத்தப்படவில்லை.

ஜனாதிபதி பிரேமதாசா இந்தியப் படையை வாபஸ் பெறும்படி கேட்டார். அத்துடன் இப்போது இந்த உடன்படிக்கை முற்றுப்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை முற்றாக ஒப்படைக்க மறுத்தனர். அதனையடுத்து இலங்கை - இந்திய உடன்படிக்கையும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளும் தோல்வியுற்றன. — இப்படி அவர் மேலும் தெரிவித்தார்

கேள்வி: அப்படியானால் நீங்களும், ராஜீவ் காந்தியும் ஒப்பந்தத்தில் கைெயழுத்திட்டபோது பரிமாறிக் கொண்ட இணைப்புகள், ஷரத்துகள் பற்றிய நிலை என்ன?

ஜே ஆர்: உடன்படிக்கையே இப்போது பொருத்தமற்றதாகி விட்டதால், இணைப்புக்கும் அதேநிலை தான். உடன்பாட்டில் உள்ள ஷரத்துகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இணைப்பில் தெரிவிக்கப்பட்ட விஷயங்களுக்கு இல்லை என்ற காரணத்தினால் இணைப்பை நாம் ஏற்றோம்.

கேள்வி: கிழக்கில் இப்போது சர்வசனவாக்கெடுப்பு நடத்தப்படுவதாக இருந்தால் நீங்கள் முன்னர் உறுதியளித்தபடி இணைப்பை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி பிரசாரம் நடத்துவீர்களா?

ஜே ஆர்: நான் இப்போது ஓய்வு பெற்றுள்ளேன். ஆனால் ஜனாதிபதி பிரேமதாஸா பிரசாரத்துக்கு வருமாறு என்னை அழைத்தால் நான் நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்வேன்.

கேள்வி: இப்பிறப்பிலேயே நிர்வாணநிலை அடைய வேண்டும் என்று விரும்புவதாக நீங்கள் கூறியுள்ளீர்கள். அதனை அடைய என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

ஜே ஆர்: புத்தரின் போதனைகளை முடிந்தளவு நான் பின்பற்றி வருகின்றேன். நிர்வாண நிலையை சாத்தியமான அளவு விரைவாக அடைவதே ஒவ்வொரு பௌத்தனின் இலட்சியமாகும்; நான் விஸ்கியைக் குடித்துக் கொண்டு நிர்வாண நிலையை அடைய முயற்சிப்பதாக உங்கள் பத்திரிகை எழுதியிருக்கிறது நான் விஸ்கி குடிப்பதில்லை.

கேள்வி: மது அருந்துகிறீர்களா?

ஜே.ஆர்.: டாக்டரின் ஆலோசனையின் பேரில் எப்போதாவது கொஞ்சம் பிராந்தி அருந்துகின்றேன்; ஆனால் அது வழக்கமாக அல்ல. பௌத்த நூல்களில் ஒன்றில் அரஹாத் மது அருந்தியதாகக் கூறப்பட்டுள்ளது. நிர்வாண நிலை அடைந்த அரஹாத் மது அருந்தலாம் என்றால் நிர்வாண நிலையை அடைய முயற்சிக்கும் பௌத்தன் ஒருவன் மருத்துவ ரீதியிலான பிராந்தி குடிப்பதில் என்ன தீங்கு உண்டு? — என்றார்.

அரசியல் கட்சிகளுடன் அவருக்கு இப்போதுள்ள தொடர்புகள் குறித்து கேட்ட போது — ''எந்த அரசியல் கட்சியுடனும் எனக்குத் தொடர்பு கிடையாது. எந்தக் கட்சிக்கும் ஆலோசனை வழங்குவதிலும் நான் ஈடுபடவில்லை

''அரசியலுக்குள் என்னை இழுத்து விட சிலர் முயற்சிக்கின்றார்கள் ஆனால் அரசியலில் இருந்து ஒதுங்குவது என்ற எனது முடிவு இறுதியானதாகும்.

''தங்களுக்குள் இருக்கும் வேறுபாடு பற்றி பரஸ்பரம் பேசித் தீர்க்கும் படி நான் அவர்களைக் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுவது முழுப் பொய்யாகும். என்னை வந்து சந்திப்பதை தவிர்க்கும்படி நான் அவர்களைக் கேட்டுள்ளேன் உண்மையில் நான் அவர்களைச் சந்திப்பதே இல்லை'' — என்று ஜே ஆர். ஜெயவர்த்தனா பதிலளித்தார்.

[உ-எ]

## அகதி முகாமில் 70 ஜோடிகளுக்கு திருமணம்

கொழும்பு, செப். 22

வவுனியா வேப்பங்குளம் அகதிகள் முகாமில் 70 ஜோடிகளுக்கு ஒரே நாளில் அதாவது கடந்த ஞாயிறன்று திருமணம் நடைபெற இருந்ததாக கொழும்பு தமிழ் வார இதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

(த-5)

## 60 அடி சுரங்கம் குடைந்து தப்பினராம்!

கொழும்பு, செப். 22

களுத்துறை பெலவத்த தடுப்பு முகாமிலிருந்து ஒரு தொகை கைதிகள் தப்பியோடிய சம்பவம் தொடர்பாக அதிர்ச்சி தரும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

அறுபது அடி நீள சுரங்கப் பாதை ஒன்றைக் குடைந்து அதன் வழியாகவே கைதிகள் தப்பியதாகக் கூறப்படுகிறது.

(உ)

## ஒரு நாள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 22

உணர்வுபூர்வமாக இடம் பெற்று வரும் தியாகி லெப்டினன்ட் கேர்ணல் திலீபனின் ஐந்தாம் நாள் நினைவின் ஏழாம் நாளாகிய நேற்று கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க முன்றலில் அப்பகுதி மக்களால் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது;

(த)

## ஸ்ரீலங்கா விமானப் படைக்கு

# எந்த ரக விமானத்தை கொள்வனவு செய்வது?

## நிபுணர்கள் கருத்து வேறுபாடு

கொழும்பு, செப். 22

தரைத்தாக்குதலுக்கு பயன்படுத்தக்கூடிய சண்டை விமானம் ஒன்றை வாங்குவதற்கு கேள்விப்பத்திரம் கோரிக்கை சமர்ப்பிப்பதற்கான முடிவு திகதியை மேலும் 3 வாரங்களுக்கு ஸ்ரீலங்கா விமானப்படை நீடித்துள்ளது

எந்த ரக சண்டை விமானத்தை வாங்குவது என்பது குறித்து நிபுணர்கள் தீர்மானம் எடுப்பதற்கு மேலும் கால அவகாசம் வழங்கவே இத் திகதி நீடிப்பு என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போது பாவனையில் உள்ள சண்டை விமானங்களிலும் பார்க்க திறமையான குறிப்பிட்ட ரக சண்டை விமானம் ஒன்றை வாங்குவது என விமானப்படை முன்னர் எண்ணியிருந்தது என்றும் —

அந்த ரக சண்டை விமானம் இராணுவ தேவைகளை எந்த அளவு திருப்திப்படுத்தும் என்பது குறித்து நிபுணர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது

தற்போது விமானப்படையினர் பயன்படுத்தி வரும் 'சியாமாச் செட்டி எஸ். எப். - 260'' ரக சண்டை விமானங்கள் 1980 நடுப்பகுதியில் வாங்கப்பட்டவை என்றும் —

அக்காலம் முதல் அவை தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (உ-எ)

# ஆயுதங்களைக் கடலில் கொட்டியதற்காக இலங்கை அரசு மீது வழக்குத் தாக்கலாகும்?

கொழும்பு செப். 22

தமக்குச் சொந்தமான— இரண்டாம் உலக மகா யுத்த காலத்துப் போர் ஆயுதங்களை — கடலில் கொட்டியது தொடர்பாக இலங்கை அரசு மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த வர்த்தக நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

மேற்படி வெடிப்பொருள்கள் மற்றும் ஆயுதங்களை அந்த வர்த்தக நிறுவனம் 1-7-1985இல் இலங்கைக்குக் கொண்டு வந்தது. மற்றொரு கப்பலில் ஏற்றிச்செல்லப்படுவதற்கு முன்னர் — 30-06-1988 வரை — காலியில் அவற்றை களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும்படி பெல்ஜியம் நிறுவனம் அப்போது கோரியிருந்தது.

ஆனால், குறித்த திகதிக்குப் பின்னரும் அவற்றை இன்னொரு கப்பலில் அப்புறப்படுத்த அந்த நிறுவனம் தவறிவிட்டது என்று இலங்கைத் தரப்பில் கூறப்படுகிறது

இது தொடர்பாக இலங்கை அரசு அந்த நிறுவனத்துக்கு பல தடவைகள் அறிவித்தல் அனுப்பியது.

ஒரு கட்டத்தில் —

அவ்வாயுதங்கள் மற்றும் வெடிபொருள்களை வாங்கும்படி இலங்கை அரசை பெல்ஜியம் நிறுவனம் கேட்டது.

விலைப்பிரச்சினை காரணமாக அவற்றை வாங்குவது சாத்தியப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகளைப் பிரகடனப்படுத்தி, அவற்றின் கீழ் அவ்வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் அழிக்க இலங்கை அரசு முன்னர் எண்ணியிருந்தது. இருநாடுகளுக்குமிடையிலான உடன்பாடுகளை அச்செயல் மீறுவதாக முடியும் என்று சட்டநிபுணர்கள் எச்சரித்ததைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டது.

அதன் பின்னரும் அவற்றை பெல்ஜியம் நிறுவனம் ஏற்ற முன்வரவில்லை. தொடர்ந்தும் அப்பொருள்கள் இருப்பது நாட்டின் மக்களுக்கும் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்று கருதி அவற்றைக் கடலில் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது — இப்படி இலங்கைத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நீதிமன்றத்தில் பெல்ஜியம் நிறுவனம் வழக்குத் தொடரும் பட்சத்தில், என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது பற்றி பாதுகாப்பு அமைச்சு சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(உ-எ)

## இளம் ஆசிரியர் மரணம்!

இளம் ஆசிரியர் எஸ். செல்வகுமாரின் மரணம் தொடர்பாக மேலும் புலன் விசாரணை நடத்தும்படி நுவரெலியா பதில் நீதிவான் ஏ. பி. கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆசிரியர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. அவரது உடல் ராகல பொலீஸ் பகுதியில் உள்ள வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

(த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கு நாடொன்றிலிருந்து

# நவீன ஆயுதங்கள், தளபாடங்கள் புலிகள் கொள்வனவு செய்துள்ளனர்

## சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு, செப். 22

பல லட்சம் டொலர் பெறுமதியுடைய நவீன ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும், மத்திய கிழக்கு நாடொன்றிலுள்ள ஆயுத விற்பனையாளரிடம் இருந்து விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்துள்ளனர்.

ஆஸ்திரேலிய இரகசியப் பொலீஸார் இத் தகவலை வெளியிட்டனர் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கொள்வனவுக்கான பணம் சுவிட்சர்லாந்திலுள்ள வங்கி ஒன்றின் இரகசியக் கணக்கிலிருந்து வழங்கப்பட்டதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

மிகவும் சக்தி வாய்ந்த ராடார், ஸோனார் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத தளபாடங்களில் அடங்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று தடவைகள் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இக்கொள்வனவைச் செய்தனர் என்றும்—

புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்காக கேம்பிரிட்ஜ்ஜிலுள்ள தமிழர் சம்மேளனம் லட்சக்கணக்கான டாலர்களைச் சேர்த்துள்ளதாக லண்டன் தகவல் தெரிவிப்பதாகவும்—

ஜேர்மன் இரகசியப் பொலீசாரும் புலிகளின் ஆயுதக் கொள்வனவு பற்றி விசாரணை செய்யத் தொடங்கியுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## நாளை

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், ஊழியர்களுக்கான ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி பயிற்சி நாளை காலை பத்து மணிக்கு சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறும். [உ-117]

★ ★ ★

தென்மராட்சி, செப். 22

1980 ஜூலை வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட— வட பிராந்திய போக்குவரத்துச் சபை — ஊழியர்களின்— 22 மாத சம்பள நிலுவை சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு மோன்டாலில் சாலையில் நடைபெறவுள்ளது. [உ-117]

## மரண அறிவித்தல்கள்

### நடராசா சிவபாக்கியம்

சரவெட்டி கிழக்கைச் சேர்ந்த நடராசா சிவபாக்கியம் 20-09-92 காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், திரு. இராஜேஸ்வரன் [N. R, சரவெட்டி], இராசகோபால் [இலங்கை வங்கி, நெல்லியடி], இராசலிங்கம் [சுவிஸ்], இராசரட்ணம் [L O, பருத்தித்துறை], திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீராசபுவேந்திரன் [ஈகின் ஆச்சகம், யாழ்ப்பாணம்], திருமதி இராசசுலோசனா சிவகுருநாதன் [மாணவர் கலசாலை, சரவெட்டி] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராஜேஸ்வரன் (மகன்)

கிருஷ்ணா வாசா,
சரவெட்டி கிழக்கு,
சரவெட்டி.

[22627]

### வைத்திலிங்கம் நாகேந்திரம்

சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நாகேந்திரம் அவர்கள் 21-9-92இல் சிவபதமடைந்து விட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, லோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, சிவதாசன், விமலதாசன் [கொழும்பு], ஜெயராசா [கொழும்பு], மஞ்சுளாதேவி [யாழ்ப்பாணம் மோதனா வைத்தியசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [21-9-92] தேவாலய வீதி இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
திருமதி நாகேந்திரம்

தேவாலய வீதி,
சங்கானை.

[22622]

### வீணுகோபால் கிருஷ்ணகுமார் (மாயவன்)

புலோலி, புற்றாளையைச் சேர்ந்த வீணுகோபால் கிருஷ்ணகுமார் [மாயவன்] கடந்த சனிக்கிழமை [19-09-92] ஆனையிறவில் இடம்பெற்ற இராணுவ நேரடி மோதலில் வீரமரணம் எய்தினார். இவர் கணபதிப்பிள்ளை வீணுகோபால் (அதிபர் - குடத்தனை அ. த. க., வித்தியாலயம்), திருமதி சின்னம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும், கிருஷ்ணவேணி [நீதிமன்றம், பருத்தித்துறை], கிருஷ்ணகோபால் [அப்டன் - சுவிற்சலாந்து], கிருஷ்ணபாமா [நிர்மாணத்துறைத் திணைக்களம்- வடகிழக்கு மாகாண சபை, திருகோணமலை], கிருஷ்ணபகவான் [கண்ணன் -குகன் ஸ்ருடியோ, சாவகச்சேரி] கிருஷ்ணராஜா [யாழ். பல்கலைக்கழக 1ஆம் ஆண்டு விஞ்ஞான பீட மாணவன்] கிருஷ்ணகுமரன் (முரளி), கிருஷ்ணசூரியன் (வாசன்), கிருஷ்ணசந்திரா [வாமதி - யாழ். புற்றளை மகா வித்தியாலயம்] ஆகியோரின் சகோதரனும் மு. சண்முகராஜா [T. A. நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனிக்குளம்], ப. தயாபரன் [திருகோணமலை] ஆகியோரின் மைத்துனரும், மதுகுலன், அச்சுதகோபி ஆகியோரின் மாமனாருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (22-09-92) காலை 8-00 மணிக்கு நடைபெற்று மாவீரர் மயானத்தில் புகழுடல் விதைக்கப்படும்.

தகவல்;
பெற்றோர்

"வேணி இல்லம்"
புலோலி.

[22629]

### திருமதி செல்லையா தங்கம்மா

மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 213, கஸ்தூரியார் வீதியில் (லலிதா மாளிகை) வசிப்பவருமாகிய செல்லையா தங்கம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வீரசிங்கம், இந்திரசித்து (லலிதா நகை மாளிகை), தங்கமலர், சிவலிங்கம், சிவபாதலிங்கம் (செல்லையா சிவபாதலிங்கம் நகை மாளிகை), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராஜா (மைதிலி நகை மாளிகை), பூலோகநாதன் (ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ் நாரம்மல), காலஞ்சென்ற நாகம்மா, மகாலெட்சுமி, யோகேஸ்வரி, மகுடராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இறுதிக்கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து இன்று (22-9-92) மாலை 3.00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
செல்லையா சிவபாதலிங்கம் (மகன்)

213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

[22625]

# புலிகள் ஏமாந்துவிடுவார்கள் என்று மக்கள் அஞ்சவேண்டியதில்லை!

## யோகி சொல்கிறார்

யாழ்ப்பாணம், செப். 22

தமிழர்களின் தனித்துவத்தைக் காப்பாற்றிச் சுதந்திரத்தை அடையும் இலட்சியத்துடன் போராடும் நாம் எவரிடமும் ஏமாந்து விடுவோம் அல்லது தோற்றுவிடுவோம் என்று எமது மக்கள் எவரும் நினைக்கவேண்டியதில்லை.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் பிரமுகர் யோகரத்தினம் யோகி.

யாழ். சமூகக்கல்வி மன்றத்தினால் பதிக்கப்பெற்ற "ஆண்டு 9 - வரலாறு" நூலின் வெளியீட்டு விழா நேற்று முற்பகல் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

யாழ். கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடந்த வெளியீட்டு விழாவில் பேசுகையிலேயே திரு. யோகி மேற்கண்டவாறு தெரிவித்தார்;

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் சுதந்திரம் பெறுவதற்கு எமது தனித்துவம் காக்கப்படவேண்டும். தனித்துவத்தை காப்பதற்கு எமது வரலாறு பேணப்பட வேண்டும், எழுதப்பட வேண்டும்.

தமிழர்களின் வரலாற்றில் பல மறைப்புகள், திரிப்புகள் மட்டுமன்றி ஏமாற்றுகளும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் நாம் ஏமாறமாட்டோம்.

விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை மட்டுமன்றி இந்திய இராணுவம், பிரிட்டிஷ் சினிமினி, ரஷ்ய ஜே. வி. பி., இஸ்ரேலிய மொஸாட் ஆகியவற்றின் செயற்பாடுகளையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது.

ஆனால் விடுதலைப் புலிகள் நல்லவர்களுக்கு நல்லவர்கள், வல்லவர்களுக்கு வல்லவர்கள், சூழ்ச்சி செய்பவர்களுக்கு பதிலடியாகச் சூழ்ச்சி செய்யும் திறனுள்ளவர்கள் எவரிடமும் நாம் ஏமாந்து விடமாட்டோம்.

நாம் அரசியல் சதுரங்கம் ஆடுவதற்குப் பின்னிற்பதில்லை. காய்களை நகர்த்தவேண்டுமானால் நகர்த்தியே ஆவோம். ஆனால் எமது இலட்சியத்தில் வெற்றி காணும்வரை போராடுவோம் அதுவரை ஓர் அரசுக்குரிய செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்வோம் — இவ்வாறு அவர் கூறினார். [அ-ம]

[வெளியீட்டு விழா பற்றிய விவரமான செய்தி பின்னர் பிரசுரமாகும்]

## பூநகரிப் படையினர் சூடு:

# மீனவர் ஒருவர் படுகாயம் இருவரைக் காணவில்லை

தென்மராட்சி செப். 22

கெற்பலியிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் படகு ஒன்றை நோக்கி பூநகரி சுடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார். படகில் வந்த இருவர் காணாமல் போயினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

காயமடைந்த சி. மனோரஞ்சிதன் (வயது 21) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். படையினரின் துப்பாக்கிச் சூட்டை அடுத்து படகிலிருந்து கடலில் பாய்ந்ததாகக் கூறப்படும் சிவா, நாகேன் ஆகிய இரு மீனவர்கள் காணாமல் போயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

# 'லேக்ஹவுஸ்' பத்திரிகைகளை பகிஷ்கரிக்கும் இயக்கம்

## சு. க. இன்று ஆரம்பிக்கிறது

கொழும்பு, செப். 22

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளை வாங்காது பகிஷ்கரிக்க வேண்டும் என்று மக்களைக் கோரும் இயக்கம் ஒன்றை சுதந்திரக் கட்சி இன்று ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறைந்த பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிரார்த்த தினத்தை ஒட்டி இன்று நுகேகொடையில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது

இந்தக் கூட்டத்தில் வைத்து திருமதி பண்டாரநாயக்கா 'லேக்ஹவுஸ்' பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்யலாம் என்று தெரியவருகிறது. [உ-எ]

# சிப்பாயாகச் சேருவதற்கான தகைமைகள் குறைப்பு

கொழும்பு, செப். 22

இராணுவத்தில் சிப்பாயாகச் சேருவதற்குரிய கல்வித் தகைமைகளை பாதுகாப்பு அமைச்சு குறைத்துள்ளது.

எட்டு அல்லது ஒன்பதாம் வகுப்பு வரை படித்தவர்கள் இராணுவத்தின் நிரந்தர சேவையில் சேர்ந்து கொள்ள இனிமேல் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

இராணுவத்துக்கு கூடுதலானோரை சேர்த்துக் கொள்ளும் முகமாகவே கல்வித் தகைமை குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் மூன்றாம் வாரம் ஆட்திரட்டலுக்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது, இராணுவத்துக்கு தேவையான விண்ணப்பதாரர்கள் சமூகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

# தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் நாளை முதல் நேர்முகப் பரீட்சை

தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் பெற இருக்கும் 482 பேரின் தகுதி, தராதரம் போன்றவற்றைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை முதல் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளன.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

நியமனம் பெறவுள்ளவர்களின் தகுதி, தராதரம் என்பன பரிசீலிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்படும்.

கோட்ட ரீதியாக நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி விவரம் வருமாறு:-

★ நாளை புதன்கிழமை சாவகச்சேரி கோட்டத்தில்— பிற்பகல் 1.30 மணிக்கு

★ 24 ஆம் திகதி பருத்தித்துறை கோட்டத்தில்— காலை 8.30 மணிக்கு

★ 25 ஆம் திகதி பண்டத்தரிப்பு கோட்டத்தில்— காலை 8.30 மணிக்கு

★ 26 ஆம் திகதி வேலணை, யாழ்ப்பாணம் கோட்டங்களில் — காலை 8.30க்கும், முற்பகல் 11 மணிக்கும்

★ 27 ஆம் திகதி [illegible] கோட்டத்தில் காலை [illegible]

பரீட்சை இடம்பெறும்.

தேசிய அடையாள அட்டை, கல்வித்தகைமை சான்றிதழ்கள் கிராமசேவையாளரின் கடிதம், தொண்டர் ஆசிரியராக நியமனம் பெற்ற கல்வி அலுவலக நியமனக் கடிதம், தற்சமயம் கல்வி போதிப்பதை உறுதிப்படுத்தும் அதிபரின் கடிதம் ஆகியவற்றை நேர்முகப் பரீட்சையின் போது தொண்டர் ஆசிரியர்கள் வைத்திருக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (உ-6)

## மூதூர் பாதைத் தகர்ப்பு:

# உயிரிழந்த படையினரின் ஆயுதங்கள் முகத்துவாரத்தில்

## இராணுவம் மீட்டுள்ளதாம்

கொழும்பு, செப். 22

கடந்த 10 ஆம் திகதி இடம் பெற்ற மூதூர் பாதைப் படகு தகர்ப்பு சம்பவத்தில் உயிரிழந்த படையினர், சம்பவம் நடந்த வேளை தம்முடன் வைத்திருந்ததாகக் கருதப்படும் ரி 56 ரகத் துப்பாக்கிகள், கிரனேட், கிளிவெட்டி முகத்துவாரம் பகுதியிலிருந்து மீட்கப்பட்டன.

இந்த துப்பாக்கிகளுடன் மகசின்கள், தோட்டாக்கள், கைக்குண்டுகள் மற்றும் இராணுவத் தளபாடங்களும் மீட்கப்பட்டதாக கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதைப் படகில் வெடித்த குண்டின் சில பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும்— இவை பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 693/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org